# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 44

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**



அன்னி பெசன்ட்

# தன்னாட்சி இயக்கமும் வகுப்புரிமையும்!

*20-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் இடஒதுக்கீட்டுக் கொள்கையைத் தீர்மானித்த முக்கியமான காலம். பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதை அடிப்படையாகக் கொண்டு, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி செயல்பட்டு வந்தது. அக்கட்சி 'மிதவாத', 'தீவிரவாதக் காங்கிரஸ்' என்று இருபிரிவுகளாகப் பிரிந்திருந்தது.*

*1909இல் நிறைவேற்றப்பட்ட மிண்டோ-மார்லி சீர்திருத்தம் காங்கிரஸ் கட்சியினருக்கு மகிழ்ச்சி தரவில்லை. இந்நிலையில், இந்திய மக்களே இந்தியாவை ஆளவேண்டும் என்ற நோக்கில், 'அன்னிபெசன்ட்', 'பாலகங்காதர திலகர்', 'முகமது அலி ஜின்னா' உள்ளிட்டோர் முயற்சியில் 1916-இல் 'தன்னாட்சி இயக்கம்' (Home Rule Movement) துவக்கப்பட்டு, 1921-ஆம் ஆண்டு வரை செயல்பட்டது.*

*தன்னாட்சியை நோக்கமாகக் கொண்டு பாலகங்காதர திலகர் பம்பாய் மாகாணத்திலும், அன்னிபெசன்ட் சென்னை மாகாணத்திலும் இயங்கினர்.*

*இங்கிலாந்திடமிருந்து விடுதலை பெறுவதைக் கொள்கையாகக் கொண்டு அயர்லாந்து 'தன்னாட்சி இயக்க'த்தைப் பின்பற்றி அயர்லாந்தைச் சேர்ந்தவரான அன்னிபெசன்ட் முன்னெடுப்பில், இந்தியாவில் 'தன்னாட்சி இயக்கம்' செயல்பட்டது. காங்கிரசில் இருந்த ராஜாஜி உள்ளிட்ட பலர் தன்னாட்சி இயக்கத்திலும் இணைந்து செயல்பட்டனர்.*

*ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியர்கள் விடுதலை பெற்று தன்னாட்சி அமைக்கவேண்டும் என்று விரும்பிய அன்னிபெசன்ட், பிராமண ஆதிக்கத்திலிருந்து பிராமணரல்லாதவர்கள் விடுதலை பெற வேண்டும் என்று விரும்பவில்லை. அவர் துவங்கிய 'நியு இந்தியா (NEW INDIA)' எனும் பத்திரிக்கையில் பார்ப்பனரல்லதார் கொள்கை அறிக்கையைக் கடுமையாகத் தாக்கி எழுதினார்.*

## சிறுபிள்ளைத்தனமான கோரிக்கை

*நம் நாட்டைச் சேர்ந்த சகோதரர்கள் சிலர் தேச உருவாக்கத்தை எதிர்க்கும் நமது எதிரிகளின் பிளவுவாதக் கொள்கைகளுக்கு இரையாகியுள்ளனர் என்றும், சிறுபிள்ளைத் தனத்துடனும் தொலைநோக்குப் பார்வையற்றும் இருக்கின்றனர் என்றும், நாட்டின் முன்னேற்ற விஷயத்தில் தனிமனித சுதந்திரத்தை ஒதுக்கித்தள்ளவேண்டும் என்பதை, அறியாத சிறுபிள்ளைகளாக இருக்கின்றனர் என்றும் அன்னிபெசன்ட் கருதினார்.*

*கல்வி, வேலைவாய்ப்பு, அரசு நிர்வாகம் உள்ளிட்ட எங்கெங்கும் நிறைந்திருந்த பார்ப்பன ஆதிக்கத்தைக் கண்டித்தும், வகுப்புரிமையை வலியுறுத்தியும் வெளிவந்த 'பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை' அன்னிபெசன்ட் பார்வையில் தேசபக்தியற்ற, குறுகிய பார்வை கொண்ட மனிதர்கள் எழுதிய ஆவணம். பார்ப்பனரல்லாத இயக்கத்தின் முக்கிய நோக்கம் இந்திய தேசிய காங்கிரஸ், தன்னாட்சி இயக்கத்தின் செயல்களைக் குறைகூறுவதே என்றார் அவர்.*

*தன்னாட்சி இயக்கத்தில் அன்னி பெசன்டுடன் இணைந்து பணியாற்றிய சி.பி. ராமசாமி ஐயர் 'பார்ப்பனரல்லாத அறிக்கை, கருத்தில் கொள்ளத் தகுதியற்றது' என்று நிராகரிக்க முயற்சித்தார். முக்கியமாக பிராமணர்களைத் தாக்குவதே பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை என்பது அவர் பார்வை. பிராமணர்களைத் தாக்குவதை விட்டுவிட்டு, வெளிநாட்டுக்குக் குழந்தைகளை அனுப்பிப் படிக்கவைக்க வேண்டும் என்று அறிவுரை கூறினார்.*

*"கல்வியிலும், அரசு அதிகாரத்திலும், வேலைவாய்ப்பிலும் பார்ப்பனரல்லாதவர்களின் பங்கை மறுக்கும் ஒரு பிராமணரைக் கூட இந்தியா முழுமைக்கும் தேடினாலும் கண்டறிய இயலாது" என்று கூறியவர் சி.பி. ராமசாமி ஐயர். ஏனெனில், பார்ப்பனரல்லாதவர்கள், பிராமணர்களின் ரத்தத்தின் இரத்தம் என்பது அவரது கருத்து.*

## பார்ப்பனர்களை வெறுக்கக் கூடாது

*தன்னாட்சி இயக்கத்தின் இன்னொரு முக்கியத் தலைவரான சுப்ரமணிய ஐயர் பார்ப்பனர்களை வெறுக்கும் விதமாக பிராமணரல்லாதவர்களும் பஞ்சமர்களும் தவறாக வழிநடத்தப்படுகிறார்கள் என்று வலியுறுத்தினார். 'வர்ணாசிரமக் கொள்கை' சில சமயங்களில் பிராமணர்களின் நலன்களைப் பாதுகாப்பது போல் தோன்றினாலும், அது கீழ்நிலையில் உள்ளவர்களை, உயர்நிலைக்கு வர அனுமதித்தது என்று வர்ணதர்மத்திற்கு ஆதரவாக நின்று பார்ப்பனரல்லாதாரின் வகுப்புரிமையை எதிர்த்தார் அவர்.*

*தன்னாட்சி இயக்கத்தில் இணைந்திருந்த பார்ப்பனரல்லாத தலைவரான கேசவ பிள்ளை போன்றோரும் வகுப்புரிமை கோரிய பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. சென்னை, சட்ட மன்றத்தில் நீண்டகாலம் உழைத்த மக்கள் பிரதிநிதி என்ற முறையிலும் விசுவாச உணர்வு கொண்ட பிரிட்டிஷ் குடிமகனாகவும் 'பிராமணரல்லாத இந்து' என்ற முறையிலும் பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கையிலிருந்து தன்னைப் பிரித்துக்கொள்வதைக் கடமையாகக் கருதினார்.*

**அன்னிபெசன்ட் தலைமையில் பார்ப்பன நலனுக்கு புது அவதாரம் எடுத்திருப்பதைக் கண்டு பார்ப்பனரல்லாத தலைவர்கள் வெகுண்டெழுந்தனர். 'தன்னாட்சி என்பது பார்ப்பன ஆட்சியே' என்று ஒற்றைக் குரலில் ஓங்கி ஒலித்தனர்.**

*இந்தியர்கள் தங்கள் கடந்த காலத்தைப் படிக்க வேண்டும் என்று கூறிய அன்னிபெசன்ட், கடந்த காலத்தில் கதாநாயகர்களையும் அவர்களது வீரதீரச் செயல்களையும் கண்டறிய முடியும். கடந்த காலத்தை அறிந்தால், இந்தியர்கள் என்பதில் பெருமைப்படலாம் என்று பார்ப்பனரல்லாத இந்துக்களுக்கு அறிவுரை கூறினார். ஏனெனில், இந்தியா இவ்வுலகிற்கு மதம், தத்துவம், இலக்கியம், கலை, தேசபக்தி கொண்ட மிகச் சிறந்த போர்வீரர்கள் உள்ளிட்டவற்றை அளித்த நாடு. இத்தகைய அற்புதமான கொடைகளை உலகிற்கு அளித்த இந்தியாவை வரலாற்றுப் பக்கங்களிலிருந்து துரோகத்தால் மட்டுமே நீக்கும்.*

*பார்ப்பனரல்லாதார்கள் வகுப்புரிமை கேட்கும் அப்படிப்பட்ட துரோகிகளாக இருக்கக் கூடாது என்று பார்ப்பனரல்லாதவர்களைத் துரோகத்தின் நிழலிருந்தும் காப்பாற்ற முனைந்தார் அன்னிபெசன்ட்.*

*பிராமணர்களைக் குறை கூறுபவர்கள் தன்னை 'இந்து' என்று சொல்லிக் கொண்டாலும் நன்றிமறந்தவர்கள். ஏனெனில், பிராமணர் என்பது சிறுபான்மைச் சாதியை மட்டும் குறிப்பதல்ல, அது ஒட்டுமொத்த நாகரிகத்தைக் குறிப்பதாகும் என்ற பார்வையை அன்னிபெசன்டின் 'நியு இந்தியா' வெளிப்படுத்தியது.*

*பிராமண ஆதிக்கம் என்ற கற்பனையிலும், பிராமணரல்லாதாரின் தகுதியின்மை பற்றிய தெளிவற்ற கருத்துக்களால் குழப்பமடைந்தோர் மட்டுமே பார்ப்பனரல்லாதோர் கொள்கை அறிக்கையை ஆதரிக்கின்றனர் என்றும், சிலர் கூறினர்.*

## நால்வர்ண கோரிக்கை

*கற்றல் திறனை மனதிலும் இதயத்திலும் சுமந்து கொண்டிருக்கும் பிராமணர்கள் வரலாற்றுத் தேவையாலும், விதியின் வலிமையாலும் பொதுவாழ்வில், பங்கேற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதை அன்னிபெசன்ட் நினைவுபடுத்தினார். தன்னாட்சி இயக்கத்தின் நோக்கம் இந்திய விடுதலை என்று கூறிக்கொண்டாலும், பார்ப்பனர்களின் நலனைக் காப்பதில் அன்னிபெசன்ட் மிகுந்த அக்கறையுடன் இருந்தார். பெரும்பான்மையாக பார்ப்பனர்கள் மட்டுமே கல்வி பயின்ற அக்காலத்தில் கல்லூரி, பள்ளிக் கல்விக் கட்டணத்தை அன்றைய மெட்ராஸ் மாகாண அரசு உயர்த்திய போது அன்னிபெசன்ட் கொதித்துப் போய்விட்டார்.*

*கல்விக்கட்டண உயர்வு பிராமண மாணவர்களின் தலைவிதியை மாற்றிவிடும் என்று வருந்தினார். 'இதுகாறும், கல்வி உரிமையை ஏகபோகமாக அனுபவித்தவர்களைக் கல்விப்பிச்சை கேட்டு கெஞ்சும் நிலைக்குத் தள்ளியது பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுங்கோன்மைகளில் ஒன்று' என்று கூறவும், அன்னிபெசன்ட் தயங்கிவில்லை.*

*சுருங்கச் சொன்னால், அன்னிபெசன்ட் 'நால்வர்ணக் கொள்கை'யை ஆதரித்தார், பார்ப்பனர்களின் நலனைக் காக்க முன்னின்றார். ஆரிய கலாச்சாரத்தைக் காக்க வந்த அவதாரமாக தன்னை நினைத்துக் கொண்டு செயல்பட்டார்.*

*அன்னிபெசன்ட் தன்னாட்சி இயக்கத்தை முற்றிலும் பார்ப்பனர் நலனுக்கே அர்ப்பணித்ததை உணர்ந்த பார்ப்பனரல்லாத தலைவர்கள் விழிப்புற்றுக் கிளர்ந்தெழுந்தனர். காங்கிரசில் இணைந்து செயல்பட்ட சர் பிட்டி தியாகராயர், டி..எம்.நாயர் உள்ளிட்ட பார்ப்பனரல்லாத தலைவர்கள் தென்னாட்டுப் பார்ப்பனர்களும் வடநாட்டு ஆதிக்கமும் ஒன்றிணைந்து திராவிடர்களுக்கு அநீதி இழைத்து வரும் ஓர் அமைப்பு 'காங்கிரஸ்' என்று உணர்ந்து அதிலிருந்து விலகியிருந்தனர். 'தன்னாட்சி' என்ற புதிய போர்வையில் அன்னிபெசன்ட் தலைமையில் பார்ப்பன நலனுக்கு புது அவதாரம் எடுத்திருப்பதைக் கண்டு பார்ப்பனரல்லாத தலைவர்கள் வெகுண்டெழுந்தனர். 'தன்னாட்சி என்பது பார்ப்பன ஆட்சியே' என்று ஒற்றைக் குரலில் ஓங்கி ஒலித்தனர்.*

**...குரல் ஒலிக்கும்**

## கவனம் ஈர்க்கும் கடித இலக்கியம்!





**க**டித இலக்கியங்கள் திராவிட இயக்கத் திற்குப் புதிதல்ல. திராவிட முன்னேற்றக் கழகத் 'தம்பிகளுக்கு' பேரறிஞர் அண்ணா எழுதிய கடிதங்களும், 'உடன்பிறப்புகளுக்கு' முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய கடிதங்களும் மிகப் பிரபலமானவை.

அதைப்போன்றே, அண்ணாவின் எழுத்து நடையைப் பின்பற்றி, 'தம்பிக்கு 2' என்கிற தலைப்பில், வா.சி.ம.ப.த.ம.சரவணகுமார் எழுதியுள்ள கடிதநடையிலான நூல், காம்ரேடு பப்ளிகேசன்ஸ் வெளியீடாக, சென்னை புத்தகக் காட்சியில் விற்பனைக்கு வந்துள்ளது.

இந்நூலில், 6 நீண்ட கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சிறுமலை பற்றிய சிலப்பதிகாரக் குறிப்புகளும், அறநிலையத் துறையின் வரலாறும், அதற்கு முன் ஆலயங்களுக்குள் நடந்த தில்லுமுல்லுகள் குறித்த வரலாற்றுக் குறிப்புகளும், எழுத்தாளரின் தீவிரத் தேடலுக்குச் சான்றளிக்கின்றன. இலவசத் திட்டங்களைப் பழித்துப் பேசுவோருக்கு, அதனால் ஏற்பட்ட பலன்களை விளக்க முற்படுவதுடன், தானமாக வாரி வழங்கப்பட்ட மங்கலங்களின் வரலாற்றையும் எடுத்துச் சொல்லியிருப்பது பழித்துப் பேசுவோரை வாயடைக்கச் செய்யும் தரவுகளாக உள்ளன.

'ஆளுநர் பதவி தேவையா?' என்ற விவாதம், கோயில் நுழைவுப் போராட்டங்கள், அனைத்து சாதி அர்ச்சகர் சட்டத்தின் அவசியம், தமிழ்த்தேசியத்தின் பெயரில், திராவிட இயக்கத்தின் மீது வைக்கப்படும் பொய்மை வாதங்களுக்கான பதிலடி என ஒவ்வொரு கடிதமும் நடப்புகால சம்பவத்தில் இருந்து, வரலாற்றில் அதன் ஆதிப்புள்ளி வரை அலசுகிறது. பல இடங்களில் தேடிப்படிக்கும் செய்திகளை, ஒரு நூலில் கடித இலக்கியமாகக் கோத்திருக்கும் முயற்சி பாராட்டத்தக்கது.

நூலைப் பெற: 72001-73560

விலை: ரூ.250

## :ப்ளாஷ்பேக்



### அன்று கிளைப் பிரதிநிதி, இன்று பொதுக்குழு உறுப்பினர்!



கே.கோபால்

2006-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், முதலமைச்சராக 5-வது முறை பொறுப்பேற்றதும், சேலம் அயோத்தியா பட்டினம் பேரூராட்சிக்கு வருகை தந்திருந்தார். அப்போது, அவர் முன்னிலையில் ராமலிங்கபுரத்தைச் சேர்ந்த ஏராளமானோர் கழகத்தில் இணைந்தோம்.அப்போது மேடையில், தலைவர் கலைஞரைச் சந்தித்து சால்வை வழங்கியபோது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. கிளைப் பிரதிநிதியாகத் தொடங்கிய எனது பயணம், இன்றைக்குப் பொதுக்குழு உறுப்பினர் வரை பாதை மாறாமல் தொடர்கிறது.

**- கே.கோபால், பொதுக்குழு உறுப்பினர், சேலம் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### 'எதையும் தாங்கும் இதயம்!'

1962-ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தி.மு.க. சட்ட மன்றத்திற்கு 50 தொகுதிகளிலும், நாடாளுமன்றத்திற்கு 7 தொகுதிகளிலும் வென்று எதிர்க்கட்சியானது. ஆனால், அந்தத் தேர்தலில் அண்ணா தோல்வியுற்றார். அதனால், துவண்டிருந்த தொண்டர்களுக்கு ஆறுதல் தரும் வகையில், வெளியான திரைப்படம் 'எதையும் தாங்கும் இதயம்'. பேரறிஞர் அண்ணா, கதை, வசனம் எழுதிய திரைப்படம். அண்ணா மறைந்தபோது, அவரது நினைவிடத்திலும் 'எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது' என்றே பொறிக்கப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

707

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131